பாடம் 9

எதிர்காலத்து நம்பிக்கை

ராணியிடம் சூசன் ஓடிவந்து தனக்கு சைக்கிள் ஓட்ட கற்றுத்தருமாறு கெஞ்சினாள். நாளைக்குக் கண்டிப்பாகக் கற்றுத்தருகிறேன் என்ற ராணி, மறுநாள் கற்றுத்தரவில்லை; அப்படியானால், ராணி தன் வாக்கைக் காப்பாற்றினாளா?

தேவன் ஒருபோதும் தம் வாக்கை நிறைவேற்றத் தவறியதே இல்லை. தாம் சொன்னதைச் செய்வதற்கு தேவன் எப்போதும் ஆயத்தமாகவே இருக்கிறார்.

யூதர்களை மீட்கவும், காப்பாற்றவும், சமாதானத்தைத் தரவும் தேவன் அவர்களுக்கு ஒரு ராஜாவைத் தரப்போவதாக, வாக்குப்பண்ணினார். அந்த ராஜா எங்கே பிறப்பார் என்றும் மீகா தீர்க்கதரிசியின் புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ளது.

''எப்பிராத்தா எனப்பட்ட பெத்லகேமே, நீ யூதாவிலுள்ள ஆயிரங்களுக்குள் சிறியதல்ல; இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டுவருவார்; '' மீகா 5:2.

இந்தத் தீர்க்கதரிசனத்தைச் சொல்லி, 700 வருடங்களுக்குப் பின்னர், பெத்லகேமில் ஒரு குழந்தை பிறந்தது. இந்தக் குழந்தையின் பிறப்பை தேவதூதர்கள் வானத்திலிருந்து அறிவித்தார்கள். அதை, தேவபிள்ளைகள் தங்கள் காதுகளால் கேட்டனர். இந்தக் குழந்தையின் தந்தை தேவன். ''அவருக்கு இயேசு என்று பெயரிடுங்கள்; ஏனெனில், அவர் தமது ஜனங்களின் பாவங்களைநீக்கி அவர்களை இரட்சிப்பார்.'' மத்தேயு 1:20. ''அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள்; ... இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார்'' என்று அர்த்தமாம். மத் 1:23.

தேவன் தாம் மீகா தீர்க்கதரிசியின்மூலம் சொல்லிய வாக்கை நிறைவேற்றினார். ''அவர் நின்றுகொண்டு,



மனன வசனம்

கர்த்தர் உங்களுக்காகச் சொன்ன வார்த்தைகளிலெல்லாம் ஒன்றையும் தவறவிடவில்லை.
யோசுவா 23:14.

கர்த்தருடைய பலத்தோடும் தம் முடைய தேவனாகிய கர்த்தரு டைய நாமத்தின் மகத்துவத் தோடும் மேய்ப்பார்; ஆகை யால், அவர்கள் நிலைத்திருப் பார்கள்; அவர் இனிப் பூமியின் எல்லை பரியந்தமும் மகிமைப் படுவார்''. மீகா 5:4. இந்த வாக்குறுதி யூதர்களுக்கு விருப்ப மானதாக, ஆர்வத்தைத் தூண்டு வதாக இருந்தது. ஏனெனில், யூதர்கள் அநேக வருடங்களாக அடிமைகளாகத் துன்பம் அனு பவித்துக்கொண் டிருந்தார்கள்.

கர்த்தராகிய இயேசு இப் பூமியில், வாழ்ந்த நாட்களில், மீகாவின்மூலம் தேவன்கூறிய வாக்கு நிறைவேறியது. எப் படியெனில்,''நானே நல்ல மேய்ப்பன்;... ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கி றேன்'' என்று இயேசு சொன் னார். யோவான் 10:14,15.

அவ்வாறே நம் இயேசு தேவன், பாவிகளாகிய நமக் காகத் தமது ஜீவனையே கொடுத் தார். 1கொரி 15:3.

இயேசுவைப்பற்றி தேவன் தீர்க்கதரிசிகள் மூலமாக அதிகம் வெளிப்படுத்தியுள்ளார். மக்க ளுடைய பாவங்களிலிருந்து, அவர்களை விடுவிக்க இயேசு மிகவும் துன்பமடைந்தார்; கடைசியில் தம் ஜீவனையும் தந் தார். ஏசாயா 53:3,5,6. ஆம்! உண்மையாகவே நம் தேவன் உன்னையும் என்னையும் இரட் சிக்கவே தம்முடைய ஜீவனை விட்டார். எப்போதும் தேவன் தம் வாக்கைக் காப்பாற்றுகிறவர்!



ஓர் ஓய்வுநாளிலே இயேசு தம்மைப்பற்றி ஏசாயா தீர்க்கதரிசி எழுதிய பகுதியை ஆலயத்தில் வேதாகமத்திலிருந்து வாசித்தார்.

சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க, கர்த் தர் என்னை அபிஷேகம் பண் ணினார்; இருதயம் நொறுங்குண் டவர்களுக்குக் காயங் கட்டுதலை யும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும்,

செய்தி

தேவனுடைய வாக்குகள் உண்மையானவை. ஏனெனில், இதுவரையிலும் தீர்க்கதரிசனங்கள் யாவும் நிறைவேறியுள்ளன.

கட்டுண்டவர்களுக்குக் கட்ட விழ்த்தலையும் ... செய்யவும் வந்தார். ஏசாயா 61:1. இந்தப் பகுதியை இயேசு அக்காலத்தில் வேதவசனங்கள் எழுதியிருந்த தோற்சுருளிலே வாசித்து, ''உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றைய தினம் நிறைவேறிற்று'' என்றார். மக்கள் ஆலயத்திலே, அவ ரையே பார்த்துக்கொண்டிருந் தார்கள். லூக் 4:21. நான் சத்திய முள்ள தேவன்; என் வார்த்தை கள் உண்மையாயிருக்கிறது, என்று அவர் சொன்னது உண்டு.

என் கண்மணியே! இது கடைசிக்காலம்; வருவதாகச் சொல்லிச்சென்ற தேவன், தூதர்கள் சொல்லியபடியே, எவ்விதமாக வானத்திற்குச் சென்றாரோ, அவ்வண்ணமே திரும்பி வருவார்; நம்மை அழைத்துச்செல்வார். யோவான் 14:3.

செய்முறை: வேதாகமத்தின் வாக்குத்தத்தங்களை நாம் ஏன் நிச்சயமாக நம்பலாம்? பாடத்தை வாசியுங்கள். கீழே வார்த்தைகளில் ஒழுங்கற்றுக் கிடக்கும் வார்த்தைகளை ஒழுங்காக்கினால், பதில் கிடைக்கும்.



புதிர்